திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக ஒருவழிப் பாதையை உடனடியாக அமல்படுத்த வேண்டும். உதாரணமாக பிராட்வே போன்ற பாதைகளை ஒருவழிப் பாதையாக ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் ஒருவழிப் பாதையாக ஆக்குவது என்பது முடியாது. சாத்தியமான இடங்களில் ஒருவழிப் பாதையை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, சென்னை நகரம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களிலுள்ள போக்குவரத்து வசதிகள் போலல்லாமல், சென்னை நகரம் டவுன் பஸ் போக்குவரத்தையே நம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கும். இன்று கூவம் நதித் திட்டம் சீரானால் போக்குவரத்தைத் துரிதப்படுத்த முடியும். மேலும் மின்சார ரயில்களை அதிகமாக விடுவதன் மூலமும், சென்னை நகரைச் சுற்றி சுற்று ரயில் விடுவதன் மூலமும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சி செய்யுமா? அப்படி ஏற்படும் திட்டத்திற்கான பெரும்பகுதிச் செலவை மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சர்க்குலர் ரயில் அமைக்க வேண்டுமென்ற திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

சிதம்பரம் அருகேயுள்ள அத்திப்பட்டு சாலை

*250 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, சிதம்பரம்–சீர்காழி ரோட்டில் பழைய கொள்ளிடம் ஓரம் போகும் அத்திப்பட்டு ரோட்டில் (உப்பனாற்றங்கரையில்) சுமார் 2½ மைல் தூரம் கப்பி அடிக்கப் படாமல் சீர்க்கேடாகக் கிடப்பது விஷயமாக பொதுமக்களிடமிருந்து ஏதேனும் மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

Bus guides and fare tables

* 251 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government has decided to instruct the State Transport Department to issue bus guides and fare tables and proper notice boards for the information of travelling public?

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பயணக் கட்டண அட்டவணைகளுடன் கூடிய பேருந்து வழி காட்டி ஏடு ஒன்று, தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையினரால் விரைவில் வெளியிடப் படும். இத்துறையைச் சார்ந்த நெடுந்தொலைவு பேருந்துகள், வந்து சேர்கிற, புறப்படுகிற நேரங்களைக் குறிக்கும் அறிவிப்பு பலகைகளை, பொதுமக்களின் தகவலுக்காக பேருந்துகள் புறப்பட்டுச் செல்கிற முக்கிய இடங்களில் இத்துறை ஏற்கெனவே அமைத்து உள்ளது.

திரு. கே. வினயகம் : தலைவர் அவர்களே, "பஸ் கைடு" போன்ற வைகளை அச்சடித்துத் தருவதிலே தாமதம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பொதுமக்கள் கைக்கு அது வந்து சேரவில்லை. இரண்டாவதாக நாம் விளம்பரப் பலகைகள் வைத்திருக்கிறோம். அந்த விளம்பரப் பலகைகள் சரிவர இருக்கிறதா, பொது மக்களுக்குப் பயன்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். விளம்பரப் பலகைகளின் மீது சினிமா போஸ்டர்களையோ, மற்ற பொதுக்கூட்ட நோட்டீஸ்களையோ ஒட்டிவிடுகிறார்கள். இப்படி நடைபெறுவதைத் தடுப்பதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இனிமேலாவது அரசாங்கம் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, "கைடு" பொறுத்தவரையில் போக்குவரத்துத் துறை செயல்பட்டு வருகிறது. இந்த மாத இறுதிக்குள்ளாக கைடுகள் வெளியிடப்பட்டு விடும் என்று போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மற்றும் விளம்பரப் பலகைகளில் மீது சினிமா, பொதுக்கூட்டம் போன்ற நோட்டீஸ்கள் ஒட்டப்படாமல் பார்த்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

THIRU T. MARTIN : During office hours formerly there were the stand conductors for issue of tickets to ease the work of conductors issuing tickets in the running buses. That facilitated people getting into the bus easily. Now-a-days the stand conductors are absent in some stands. May I know the reason for the same from the Hon. Minister ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The main question is about publication of bus guides.

திரு. கே. வினயகம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் பஸ் டிரான்ஸ்போர்ட்டை நன்றாக நடத்த வேண்டுமென்பதில் எல்லாக் கட்சியினருக்கும் நல்லெண்ணம் இருக் கிறது. நாங்கள் போடுகிற கேள்விகள் உங்களைக் குற்றஞ்சாட்டு வதற்காகப் போடுகிறோம் என்று நீங்கள் நினைக்கக்கூடாது. பஸ் போக்குவரத்துத் துறைக்கு ஆலோசனை சொல்வதற்காக முன்பு "சிட்டி பஸ் டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி" என்று ஒன்று இருந்தது. அந்தக் கமிட்டியில் போக்குவரத்து துறையைச் சேர்ந்த நிர்வாகத்தினர், நகரின் பிரமுகர்கள், போக்குவரத்துப் பயணிகள், பத்திரிகை நிருபர்கள் எல்லாம் அங்கம் வகித்துக் கொண்டிருந்தார் கள். போக்குவரத்துத் துறைக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போடுங்கள், கேள்வி நேரத்தின் போது ஆலோசனை சொல்வதற்கில்லை.

திரு. கே. வினயகம் : கேள்விக்குத்தான் வருகிறேன். இந்த சர்க்கார் வந்த பிறகு ஏன் அந்த சிட்டி டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியை ரத்து செய்துவிட்டார்கள்? நாங்களே எல்லாம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு வருகிறார்களே, இந்த சீர் கேடான நிலைமைக்கு யார் காரணம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

Village Officers in Panchayat Councils

* 252 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether Village Officers are also Members of the Village Panchayats ; and

(b) if so, whether they are functioning as ex-Officio Members ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that the Village Officers have represented that they could also automatically have membership of the Village Panchayat, whether they also represented number of grievances to Hon. Minister and if so, will the Hon. Minister be able to give us details of the grievances, the action taken on them and the number of grievances that have been redressed by the Ministry?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள் எதுவும் தற்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

கிராம சேவக்குகளுக்குக் குடியிருப்புகள்

* 253 வின—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் மாவட்ட வாரியாக எத்தனை கிராம சேவக்குகளுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு உள்ளன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மொத்தம் 562 பேர் களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, 1969–70-லே எத்தனை பேர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டது? கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் கட்டடங்கள் எத்தனை? எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று தனியாகத் திட்டம் இருக்கிறதா?